மாலை முரசு
பக்கங்கள் 18
முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 26 புதன்கிழமை 13.12.2023 அதிர்வு 135

## கிரிக்கெட் இடைக்காலக் குழு நியமன வர்த்தமானி இரத்து

**நீதிமன்றத்துக்கு ஹறின் அறிவிப்பு**

இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்காலக் குழுவை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று விளையாட்டுத் துறை அமைச்சர் 04▸

# இலங்கைக்கு இரண்டாம் தவணைக் கொடுப்பனவுக்கு சர்வதேச நாணய நிதிய நிறைவேற்றுச் சபை அனுமதி




இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவுக்குச் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையுடன் இணக்கம் காணப்பட்டுள்ள 48 மாதங்களுக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதியின் முதலாவது மீளாய்வு, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையில் நேற்றிரவு நிறைவடைந்த நிலையில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் தவணைக் கொடுப்பனவாக இலங்கைக்கு 337 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படவுள்ளது.

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி அனுமதி வழங்கியது. 04▸

### தமிழ் எம்.பிக்களுடனான பேச்சு ஒத்திவைக்கப்பட்டாலும்

# சுமந்திரன், சாணக்கியன் ஜனாதிபதியுடன் சந்திப்பு

### இரு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்

(ஏ.ஜே. சார்ள்ஸ்)

**"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இன்றைய சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் பண்ணையாளர்களின் 90 ஆவது நாள் போராட்டத்தை முன்னிட்டு இன்று நானும், எம்.ஏ. சுமந்திரன் எம்.பியும் ஜனாதிபதியை நாடாளுமன்றத்தில் சந்தித்து முக்கியமான இரு விடயங்களைப் பற்றி உரையாடினோம்? - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மட்டக்களப்புமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.** 04▸



## மூன்று வெளிநாட்டுத் தூதுவர்களிடம் 'இமயமலைப் பிரகடனம்' கையளிப்பு



உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் ஆகியோர் இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்களைக் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். 04▸

## கடை உடைத்துக் கொள்ளையிட்ட மூன்று பேர் வாளுடன் சிக்கினர்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அச்சுவேலி – புத்தூர் பகுதியில் வர்த்தக நிலையத்தை உடைத்து அங்கிருந்த பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் 04▸



## 4 நாள்களில் 14 பேர் மாயம்

### ஒருவர் சடலமாக மீட்பு

நாட்டின் பல பகுதிகளில் இருந்து கடந்த மூன்று நாள்களில் 5 சிறுவர்கள் உட்பட 14 பேர் காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்களில் வயோதிபப் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி, மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுடைய மாணவன், பொரலஸ்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயது மாணவன், தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த 16 வயது மாணவன், ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய மாணவி, நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய மாணவி ஆகியோர் காணாமல்போன 04▸

# தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை உலகத் தமிழர் பேரவை சரத் வீரசேகரவுக்குப் பதில்

தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை என உலகதமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன்சுரேந்திரன் தெரிவித்துள்ளார் என 'ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளிற்கு ஆதரவளிக்கின்றீர்களா என நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர கேள்வி எழுப்பியவேளை சுரேன் சுரேந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது சுரேன் சுரேந்தின் இதனை தெரிவித்துள்ளார்.

நேற்றைய சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர நாட்டின் ஒற்றையாட்சிக்கு ஆபத்து ஏற்பட்டபோதெல்லாம் அதற்கு எதிராக பௌத்த மதகுருமார்கள் அணிதிரண்டுள்ளனர்



எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டை 2500 வருடங்களாக பௌத்தமதகுருமார் காப்பாற்றியுள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ள அவர் இந்த காலத்தில் 17 படையெடுப்புகள் இடம்பெற்றன, விடுதலைப்புலிகள் பிரிவினைவாத போரில் ஈடுபட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கங்களை அடைவதற்காக அப்பாவி பொதுமக்களை கொலை செய்வதே பயங்கரவாதம்.

ஆகவே பயங்கரவாதத்திற்கான காரணம் நியாயப்படுத்தப்பட்டாலும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முடியாது. நாங்கள் முழுமையாக பயங்கரவாதத்தை தோற்கடித்துள்ள போதிலும் விடுதலைப் புலிகளை நினைவு கூருவதற்கு மேற்குலக நாடுகள் அனுமதிக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீங்கள் விடுதலைப்புலிகளை ஆதரிக்கின்றீர்களா என்ற சரத்வீர சேகரவின் கேள்விக்கு உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் நாங்கள் தனிநாட்டு கொள்கையை ஆதரிக்க வில்லை, நாங்கள் அதற்கு ஆதரவளித் திருந்தால் நான் இங்கு வந்திருக்க மாட்டேன் என தெரிவித்தார் என ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# த.தே.ம. முன்னணி அமைப்பாளர், அவரது மகன் இருவருக்கும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் மாவீரர்களுக்கு விளக்கு ஏற்றி நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் அவரது மகன் ஆகிய இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதிவரையும் 14 நாள்க விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போல் இன்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியினர் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தினை அலங்கரிக்க மட்டக்களப்பு நகரில் இருந்து பட்டா ரக வாகனத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் மற்றும் கம்பிகள் உட்பட்ட பொருள்களை எடுத்துச் சென்ற நிலையில் வாகனத்தை



மறித்து சாரதியை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட சாரதியை பார்பதற்காக பொலிஸ் நிலையம் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா (குகன்), அவரது மகன் ஆகியேர் அங்கு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வீதியில் மாவீரர்களுக்கா விளக்கேற்றி நினைவேந்தலில் ஈடுபட்டதையடுத்து அவர்கள் இருவரையும் கைது செய்தனர். 3 பேரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை 13 ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்

இதில் விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த சாரதியை பிணையில் விடுவிப்பதற்காக கடந்தவாரம் முன்நகர்வு விண்ணப்பபத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, அவர் பிணையில் வெளிவந்தார். ஏனைய இருவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இன்றைய தினம் வழக்கு விசாரணைக்காக இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்கள் இருவரையும் எதிர்வரும் 27 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தவிட்டார்.

# சென்னையில் மிக்ஜாமால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுவிஸ் தமிழர்கள் உதவினர்

சென்னையில், மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழையால் கடுமையாக பாதிக்கப்பட்ட வடசென்னை பகுதியில் வாழும் மக்களுக்கு சுவிஸ் வாழ் தமிழர்கள் உதவிப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

வடசென்னையின், புளியந்தோப்பு பகுதியிலுள்ள குருசாமி நகர், ராஜா தோட்டம், கே.எம். கார்டன் போன்ற இடங்களில், மழை நீர் கழுத்தளவு தேங்கிய நிலையில், அங்குள்ள மக்கள் உணவு, குடி தண்ணீர் கிடைக்காமல் கடும் இன்னல்களை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் பெருமழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுவிஸ் வாழ் ஈழத்தமிழர்களின் பங்களிப்பில் "உலக இந்து ஆன்மிகக் கூட்டமைப்பு" (World Spiritual Tamil Hindu Federation - WSTHF) சார்பில், வேலுப்பிள்ளை கணேசக்குமார் 150 பேருக்கு உடுபுடைவைகளை வழங்கினார்.

தமிழ்த் தேசியப் பேரியக்கத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் க. அருணபாரதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் வெற்றித்தமிழன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அத்தோடு அந்தப் பகுதி சமூக ஆர்வலர் ஜீவா சமூக அக்கறையுள்ள இளைஞர்கள் நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

தொடர்ந்து, துயர் துடைப்புப் பொருள்கள் வழங்கும் பணிகளைச் செய்வதற்கு உலக இந்து ஆன்மிகக் கூட்டமைப்பின் தலைவர் ஜி.கணேஷ்குமார் முயற்சித்து வருகின்றார்.

தமிழ்த் தேசியப் பேரியக்கத் தோழர்கள் அந்தப் பகுதியில் துயர் துடைப்புப் பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். மக்களுக்கு அரிசி, போர்வை, நாப்கின் போன்ற அடிப்படைப் பொருள்கள் வழங்கினர்.

# மந்தபோசனத்தை நீக்குவதற்கு புதிய வேலைத்திட்டம் அவசியம்

## கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கோரிக்கை

நாட்டில் இன்று ஒட்டுமொத்த விகிதாசார அடிப்படையில் மந்தபோசனத்தை எடுத்துக்கொண்டால் விகிதாசார அடிப்படையில் அதிகரித்து காணப்படுகிறது. அந்த வகையில் பெருந்தோட்டப் பகுதிகளில் நூறு சதவீதமான சிறுவர்கள் மந்தபோசனத்துக்கு ஆளாகியுள்ள நிலமை காணப்படுகிறது.

தற்போது குழந்தைகள் பிறக்கும் போதும் வளரும் போதும் கல்வி கற்கும் போதும் இந்த மந்த போசனை காணப்படுகிறது. இந்த நிலைமை மலையகத்தில் உச்சகட்டத்தில் காணப்படுகிறது. ஆகையால் இந்த மந்த போசனத்தை நீக்குவதற்கு சிறந்த ஒரு வேலைத் திட்டத்தை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கோரிக்கை விடுத்தார்.



மந்தபோசனம் காரணமாக மலையகப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் கல்வி கற்பதில் கவனம் செலுத்த முடியாத ஒரு நிலமை காணப்படுகிறது. அஸ்வெசும வேலைத் திட்டமானது மலையகத்தில் பாரிய அளவில் தோல்வியடைந்த வேலைத் திட்டமாக காணப்படுகிறது. இந்த அஸ்வெசும நிவாரண வேலைத் திட்டத்தில் உள்வாங்க பட வேண்டியவர்கள் உள்வாங்கப்படாத காரணமாக அது தோல்வியடைந்த வேலைத் திட்டமாக நான் இதனை கருதுகிறேன்.

இந்த விடயம் தொடர்பாக நிதி இராஜாங்க அமைச்சர் சேஹான் சேனசிங்கவிடம் கலந்துரையாடி இந்த பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தபோது இந்த அஸ்வெசும வேலைத் திட்டத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் புதிய விண்ணபத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியுமென நிதி இராஜாங்க அமைச்சர் உறுதியளித்தார் என்று மேலும் தெரிவித்தார்.

# மஸ்கெலியா மக்களின் கனவு நிறைவேறியது!

(மஸ்கெலியா நிருபர்)

பல தசாப்தங்களாக மஸ்கெலியா பிரதேசத்தில் மக்களுக்கு நியாய விலையில் பொருள்களைப் பெற்று கொள்ள சதொச நிறுவனம் ஒன்று இல்லாத குறையை தற்போதைய வர்த்தக அமைச்சர் தீர்த்துள்ளார்.

மஸ்கெலியா நகரில் பிரதான வீதியில் சதொச நிறுவனம் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயகவால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபையின் முன்னாள் முதல்வர் கோவிந்தன் செம்பகவள்ளி மற்றும் சதொச நிறுவன தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஸ்ரீ சண்முகநாதக் குருக்கள், மற்றும் சுமனா ராம விகாரையின் பௌத்த மத குரு, மஸ்கெலியா பள்ளிவாயில் மதகுரு ஆகியோரின் ஆசியுடனும், மற்றும் மஸ்கெலியா சென். ஜோசப் தேசிய பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியங்கள் முழங்க நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு சுப வேளையில் சதொச நிறுவனம் திறந்து வைக்கப்பட்டது.

# அகில இலங்கை ரீதியில் சாதித்த கிளி. மாணவன்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட ரோபோ தொழில்நுட்ப தேசிய மட்ட போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி உயர்தர விஞ்ஞான தொழில் நுட்ப பீட மாணவன் கிருபாகரன் கரல்ட் பிரணவன் தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்று பெருமை சேர்த்துள்ளார்.

இவர் வலய, மாவட்ட மற்றும் மாகாண மட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்றிருந்தார்.

இவரது கண்டுபிடிப்பான Relief attempt monitoring system தற்போதும் கல்லூரியில் செயற்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இலங்கைக்கு...**

நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்தக் கடன் வசதி வழங்கப்படுகின்றது.

இந்தக் கடன் வசதியின் முதலாவது தவணைக் கொடுப்பனவாக 330 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டது.

இரண்டாம் தவணைக் கொடுப்பனவுக்குச் சர்வதேச நாணய நிதியம் அனுமதி வழங்கியுள்ளதால், மிகவும் நெருக்கடியான காலகட்டத்தைக் கடந்து, நிவாரண பொருளாதார வலயத்துக்குள் உள்நுழைவதற்கான இயலுமை கிடைக்கப் பெற்றுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தமது எக்ஸ் தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

**கிரிக்கெட்...**

ஹரின் பெர்னாண்டோ மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த குழு தற்போது கலைக்கப்பட்டுள்ளது எனவும், இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவரின் மனுவை விசாரணைக்கு எடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்மானம் வெள்ளிக்கிழமை அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

**கடை உடைத்து...**

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புத்தூர், கலைமதி பகுதியைச் சேர்ந்த 20 - 30 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து கொள்ளையடித்த சில பொருட்களும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் இருந்த வாளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரும் அச்சுவேலிப் பொலிஸாரும் இணைந்து கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

நேற்று கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த டிசம்பர் 10ஆம் திகதி புத்தூர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு சி.சி.ரி.வி. கமரா, தொலைக்காட்சிப் பெட்டி, சிகரெட் பெட்டிகள், தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் எனப் பல பொருட்கள் கொள்ளையிடப்பட்டன என்று உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

---

**4 நாள்களில்...**

சிறார்களில் அடங்குகின்றனர்.

காணாமல்போனவர்களில் நுவரெலியாவைச் சேர்ந்த 18 வயது யுவதியும், பொத்துவிலைச் சேர்ந்த 26 வயதுடைய யுவதியும், எடரமுல்லையைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரும், அநுராதபுரத்தைச் சேர்ந்த 22 வயது இளைஞரும் அடங்குகின்றனர்.

அதேவேளை, மொரட்டுவையைச் சேர்ந்த 75 வயதுடைய ஆணும், பள்ளம பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதான கூலித் தொழிலாளியும், கஹதுடுவ பிரதேசத்தில் வசிக்கும் 65 வயதுடைய ஆணும், புத்தளத்தைச் சேர்ந்த 63 வயதுடைய பெண்ணும் காணாமல் போனவர்களில் அடங்குகின்றனர்.

இதேவேளை, நோர்வூட் பிரதேசத்தில் காணாமல்போன வயோதிபப் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். எல்படை மேற்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 80 வயதான முத்து வீரம்மன் என்பவரே தோட்டத்தின் கால்வாயில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

---

**சுமந்திரன், சாணக்கியன்....**

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"இந்தச் சந்திப்பின்போது மயிலத்தமடு - மாதவனைப் பகுதியில் தொடர்ச்சியாக மாடுகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற புகைப்படங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்ததுடன் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் பிரதிகளையும் வழங்கினோம். அத்துடன் போராட்டத்தில் ஈடுபடும் எமது மக்கள் 90 நாளாகவும் போராட்டத்தைத் தொடர்கின்றனர் என்பதைப் பற்றியும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தோம். ஜனாதிபதி கூறிய எந்தவொரு விடயத்தையும் இப் பிரச்சனைக்கான தீர்வாக நடைமுறைப்படுத்தவில்லை எனவும் தெளிவுபடுத்தினோம்.

இரண்டாவதாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கான விசாரணைகள் இடம்பெறுவதோடு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்த மாட்டோம் எனக் கூறிக் கொண்டாலும் அந்தச் சட்டத்தின் கீழ் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டோரை இன்றுவரை இனங்கண்டு கைது செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் ஜனாதிபதிக்குக் கூறினோம். உடனடியாக இதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் வலியுறுத்தினோம்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை ஜனாதிபதிக்கு வழங்கி அவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் கோரினோம்.

தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எதுவும் எட்டப்படாதவிடத்தும் எதற்காக ஜனாதிபதியைச் சந்திக்கின்றீர்கள்? என மக்கள் கேள்விகள் எழுப்புகின்ற போது எமது விருப்பு - வெறுப்புக்களை துறந்து ஜனாதிபதி, அமைச்சர்கள், ஆளுநர் ஆகியோரைச் சந்தித்தும், நீதிமன்றங்களை நாடியும் மக்களுக்கான தீர்வைப் பெறுவதே எமது அயராத முயற்சி என்பதைக் கூறிக் கொள்கின்றேன். அத்துடன் மக்களுக்குச் சேவையாற்றவே மக்கள் எம்மைத் தெரிவு செய்துள்ளனர். மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து வாழ்வதற்கு அல்ல." - என்றார்.

---

**மூன்று வெளிநாட்டு...**

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், பிரிட்டன் தூதுவர் மற்றும் சுவிட்சர்லாந்து தூதுவர் ஆகியோர்களை அவர்கள் சந்தித்து தமது வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதன்போது இலங்கையில் இன நல்லிணக்கத்துக்கான இமயமலைப் பிரகடனத்தையும் தூதுவர்களிடம் அவர்கள் கையளித்துள்ளனர்.









# சர்வதேச மனித உரிமைகள் தினத்தை சிறப்பிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில்!

2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வைச் சிறப்பிக்கும் முகமாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப் பாணப் பிராந்திய அலுவலகம் 'அனை வருக்குமான கௌரவம், சுதந்திரம், நீதி' எனும் தொனிப்பொருளில் நிகழ்வு ஒன்றை நடத்தியது. இந்த நிகழ்வு இன்று (13) காலை யாழ்ப் பாணம் டேவிட் வீதியில் உள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெற்றது.

நிகழ்வில் இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவால் தயாரிக்கப் பட்டுள்ள மனித உரிமை பாதுகாவலர்க ளுக்கான வழிகாட்டல்கள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

இதன்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.




# அராலி - பொன்னாலை கரையோரத்தை சுவீகரிக்கும் செயற்பாட்டை நிறுத்துங்கள்!

**வடக்கு கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் சுப்பிரமணியம் கோரிக்கை**

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதே சத்தை சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சிகளை கைவிட வேண்டும்.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவரும் அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கட்டமைப்பின் தேசிய அமைப்பாளரு மான என்.வி.சுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்தார். அராலி தொடக்கம் பொன் னாலை வரையான கடற்கரையோரப் பிரதே சத்தை சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் முயற்சி எடுத்துள்ளது. இந்த நிலையில் அது தொடர்பாக ஊட கங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பகுதியை நம்பி நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தொழில் புரியும் நிலையில் அதனை குழப்பும் விதத்தில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் அந்தப் பகுதியில் கண்டல் தாவரங்களை நட்டுவிட்டு அரசு திட்டமிட்டு காணி களையும் இடங்களை யும் அபகரிக்கின்ற செயற்பாடுகளாகவே பார்க்கின்றோம். அரசு இந்தக் கபளீகர முயற்சியைக்கைவிட வேண்டும்.-என்றார்.

# பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தை புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

சாய்ந்தமருது சமூக செயற்பாட்டா ளரும் பொறியியலாளருமான முஹம் மட் பாரிஸ் சாய்ந்தமருது பொலிவேரி யன் பொது விளையாட்டு மைதானத் தைச் செப்பனிட்டு அதனைச் சுற்றி மரம் நடுவதற்கும் மற்றும் மைதானத் தைச் சுற்றி நடைபாதை அமைப்பதற்கு மான வேலைத்திட்டம் ஒன்றைச் செயல் படுத்துவது சம்பந்தமாக சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளனம் மற்றும் ஓகா னிக் கிறீன் சமூக அமைப்பு மற்றும் ஓ.ஜீ. விளையாட்டுக் கழகம் என்ப வற்றை அழைத்து ஆலோச னைக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந் தார்.



விரைவில் மைதானத்தை செப்ப னிட்டு மைதானத்தைச் சுற்றி மரங்கள் நடுவதாகவும் மற்றும் நடைபாதை ஒன்றை அமைப்பதாகவும் தீர்மானிக் கப்பட்டது.

அதற்கு சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளனம் மற்றும் ஓகானிக் கிறீன் அமைப்பு ஆகியன தங்களது பூரண ஒத்துழைப்புகளை வழங்கி வேலைத் திட்டத்தை சிறப்புற முன்னெடுத்துச் செல்ல ஒப்புக்கொள்ளப்பட்டது.

சாய்ந்தமருது பொது மைதானத் தைச் சிறந்த முறையில் அமைக்க முயற்சித்துள்ள சமூக செயற்பாட்டாளர் முஹம்மட் பாரிஸை அனைவரும் பாராட்டியுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வாய்ப்பைப் பயன்படுத்துவோம்!

தற்போது நிறைவேற்றப்படுகின்ற வரவு - செலவுத் திட்டத்துடன் நாட்டில் பொதுமக்களின் நிதி நிலைமை மேலும் மோசமடையப் போகின்றது என்பது நிச்சயம்.

எரிபொருள்கள் உட்பட பல அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான பெறுமதி சேர் வரி (வற்)15 வீதத்தில் இருந்து ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 18 வீதமாக உயர்கின்றது. ஏற்கனவே வற் வரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்பட்ட 138 ரகப் பொருள்களில் 97 பொருள்களுக்கு மீண்டும் முழு வற் வரி விதிப்பு நடைமுறைக்கு வருகின்றது.

ஜனவரி முதலாம் திகதி முதல் பெற்றோலிலிருந்து சாதாரண வீட்டுப் பாவனைப் பொருள்கள் வரையில் ஒவ்வொன்றின் கொள்வனவுக்கும் மேலதிகமாக மூன்று வீதத்தை வற் வரியாக நாம் செலுத்தப் போகின்றோம். சில பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு இதுவரை இந்த வரி விதிப்பு இருக்கவில்லை. இனி அவற்றுக்கும் நாம் 18 வீத வரியை அழ வேண்டியிருக்கும்.

அதே சமயம் நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புக்கான விரிவான கடன் வசதியின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவுக்கு அனுமதி வழங்கப்படுவதாக சர்வதேச நாணய நிதியம் நேற்று அறிவித்துள்ளது.

அதன்படி, இரண்டாம் கட்டமாக 33 கோடி 70 லட்சம் டொலர் (ஏறத்தாழ 11 ஆயிரம் கோடி ரூபா) இலகு கடனாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு கிடைக்கப் போகின்றது.

சர்வதேச நாணய நிதியம் வழங்குவது நன்கொடையோ, வெகுமதியோ அல்ல. அதுவும் கூட மீளச் செலுத்தப்பட வேண்டிய கடன்தான்.

கடன் மீளளிக்க வக்கற்ற வங்குரோத்து நாடு என்ற கட்டத்தை இலங்கை அடைந்ததால், இலங்கைக்குப் புதிய கடன் உதவிகளை வழங்க சர்வதேச நாடுகள் மறுத்துவிட்டன. அவற்றிடம் இருந்து ஏற்கனவே பெற்ற கடன்களின் மீளளிப்பையும் கடந்த ஒன்றரை வருடங்களாக இலங்கை மேற்கொள்ளவில்லை.

இப்போது சர்வதேச நாணய நிதியம் தலையிட்டு சில ஒழுங்குகளைச் செய்திருக்கின்றது. வெளிநாட்டு கடன்கள் மற்றும் உள்நாட்டுக் கடன் பொறுப்புக்கள், தனியாரிடமிருந்து பெற்ற கடன்கள் போன்றவற்றின் மீளளிப்புக்கு அந்தந்தத் தரப்புகளுடன் சேர்ந்து கடன் மீளளிப்புக்கான மறுசீரமைப்புக்கு புதிய ஒழுங்கைச் செய்ய சர்வதேச நாணய நிதியம் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது.

இலங்கை பெற்ற கடன்கள் எவையும் தள்ளுபடி செய்யப்படவில்லை. அந்தக் கடன் பொறுப்புகளில் இருந்து இலங்கை என்றும் விலகி விட முடியாது. எப்படியும் கடனை மீளச் செலுத்தியேயாக வேண்டும். கடன் மீள்செலுத்துகைக்கான காலத்தை தள்ளிப் போடும் சலுகைகளையே மறுசீரமைப்பாக நாடுகள் வழங்கி உள்ளன.

இந்த இடைப்பட்ட காலத்தில் சில கடன் உதவிகளை சர்வதேச நாணய நிதியம் சில கண்காணிப்புகள், கட்டுப்பாட்டுக்களுடன் தந்து உதவுகின்றது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியில் தன்னை நாடு மீண்டும் நிலை நிறுத்திக் கொள்வதில்தான் அதன் எதிர்காலமே தங்கி உள்ளது.

இந்த உதவிகள், வாய்ப்புகள், ஒழுங்குகளை நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி, நிலைமையை வழமைக்குக் கொண்டு வரும் எத்தனமாகப் பயன்படுத்தாமல், அடுத்த ஆண்டில் நடைபெறப்போகும் தேர்தல்களில் வாக்குகளை சுருட்டுவதற்கான சந்தர்ப்பமாக பயன்படுத்தி, அவற்றை மக்களுக்கு சலுகை அளிக்கும் பேரமாக உபயோகித்தால், நாடு உருப்படாமல் போகும். சந்தர்ப்பத்தை வாய்ப்பாக - சரியாக - பயன்படுத்தினால் மட்டுமே வெற்றி பெற முடியும். ஆட்சியாளர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? பார்ப்போம்.

# தென் கிழக்குப் பல்கலையில் மாடலிங், ரோபேட்டிக் ஆய்வகம்!

**(நூருல் ஹுதா உமர்)**

தென் கிழக்குப் பல்கலைக் கழக தொழில்நுட்ப பீடத்தில் ‘3 டி’ மாடலிங் மற்றும் ரோபோட்டிக் ஆய்வகம் துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவன நிதி உதவியில் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையானது அதிநவீன ‘3 டி’ மாடலிங் மற்றும் ரோபேட்டிக்ஸ் ஆய்வகத்தை நிறுவுவதற்குத் தேவையான உபகரணங்களைத் துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனத்திடமிருந்து வைபவ ரீதியாகப் பெற்றுக்கொண்டது.

இந்தக் கையளிப்பு நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், தொழில்நுட்ப பீட பீடாதிபதி கலாநிதி யூ.எல். மஜீத், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை தலைவர் ஆர். கே. றிபாய் காரியப்பர், சிரேஷ்ட விரிவுரையாளரும் முன்னாள் துறை தலைவருமான கே.எம். றிப்தி உட்பட பீடாதிபதிகள், திணைக்களத் தலைவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் றிக்கா பிரதிநிதிகளான செவ்கி மெர்ட் பாரிஸ், ஜெய்னெப் பைராக் மற்றும் ஓயா துதுன்சு ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சுகாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சர்வதேச நீர் மாநாட்டுக்கு ஏற்பாடு!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

(மஸ்கெலியா நிருபர்)

2023 ஆம் ஆண்டுக்கான சர்வ தேச நீர் மாநாடு எதிர்வரும் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. 'CEWAS' என்ற அமைச்சுக்கு உரிய நீர் மற்றும் சுகாதாரத்துக்கான மேம் பாட்டு மையத்தில் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நீர்சார் துறைகளில் நிலவும் பிரச்சி னைகள், புதுப்பிக்கத்தக்க சக்தியை நீர்வளத்துறைக்கு எவ்வாறு பயன்படுத் துவது, நீர் வழங்கலின்போது நவீன தொழில் நுட்ப பயன்பாடு, தற்போதைய சூழ்நிலைக்கேற்ப எவ்வாறு கொள்கை களை மாற்றியமைத்தல் போன்ற விட யங்கள் தொடர்பில் மாநாட்டில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

மழைநீர் மூலம் பாதுகாப்பான குடி தண்ணீரைப் பெறுவதற்கான பொறி முறை பற்றியும் ஆராயப்படும்.

மாநாட்டில் பங்கேற்கும் துறைசார் நிபுணர்கள் மற்றும் புத்திஜீவிகளிடம் இது சம்பந்தமாக ஆலோசனைகள், கருத்துகள் பெறப்படும். மக்களுக்கு சுத்தமான – சுகாதார பாதுகாப்புடைய குடி தண்ணீரை வழங்குவதே எமது பிரதான நோக்கம். இந்த இலக்கை நோக்கிய பயணத்தை துரிதப்படுத்துவது சம்பந்தமாகவும் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

நீர் வீண்விரயத்தை தடுப்பதற்கான, கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சம்பந்தமான வழிகாட்டல்களும் முன்வைக்கப்படும்.

தேசிய நீர்வழங்கல் அதிகாரசபை யால் எமது நாட்டில் 48 சதவீதமானோ ருக்கு குடி தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் சுத்தமான குடி தண் ணீரை வழங்கும் திட்டம் முன்னெடுக் கப்படுகின்றது.

கொரோனா நெருக்கடிக்குப் பின்ன ரான பொருளாதார சூழ்நிலை மற்றும் சவால்களுக்கு மத்தியிலும் இலக்கை நோக்கிய பயணத்தில் நாம் உறுதியாக உள்ளோம் என்று அமைச்சர் தெரிவித் துள்ளார்.



ஐ.நாவின் நிலைபேறான மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் சுத்தமான குடி தண்ணீர் என்ற இலக்கும் உள்ளது. அந்த திட்டத்துக்கு 6 ஆவது இடம் வழங்கப்பட் டுள்ளது. அந்த இலக்கை அடைவதற்கு நடவடிக்கை முன்னெடுத்து வருகின் றோம். இந்த இரு நாள்கள் மாநாட்டில் பிரதம அதிதியாக பிரதமர் பங்கேற்க வுள்ளார்.

உலக வங்கியின் பிரதானி சரோஜ் குமார் ஜா இதில் கலந்துகொள்ள வுள்ளார்.

# வகுப்பறை மட்ட கவின்நிலைப் போட்டி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலைவகுப்பறைகளை மாணவர்களுக்கு உகந்த கற் றல் கற்பித்தல் சூழலை உயி ரோட்டம் உள்ளதாகவும், மகிழ்ச் சிகரமானதாகவும் மாற்றி அமைப்பதற்குப் பாடசாலை யில் முன்னெடுக்கப்படும் பகுதி வாரியான வகுப்பறை மட்ட போட்டி நிகழ்ச்சிகளின் ஒரு கட்டமாக தரம் 11 மாணவர்க ளின் வகுப்பறை மட்ட போட்டி நடைபெற்றது.

இந்நிகழ்வு கல்லூரியின் முதல்வர் எம்.ஐ.ஜாபீர் ஆலோ சனைகளுக்கு ஏற்ப தரம் 11 இன் பகுதி தலைவர்களான றீ.கே.எம். சாக்கீர் மற்றும் ஏ. எம். அப்றாஜ் றிழா ஆகியோரது வழிகாட்டுதலுடன் இடம்பெற் றது.

தமது பிரிவின் அனைத்து வகுப்பறைகளிலும் உள்ளக மற்றும் வெளிச்சூழல்களை வகுப்பு ஆசிரியர்களின் ஆலோசனையுடன் மாணவர் கள் ஒழுங்கமைத்திருந்தனர்.

இந்த நிகழ்வில் கல்முனை முஸ்லிம் பிரிவின் கோட்டக்கல் விப் பணிப்பாளர் யூ.எல். றியாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.











# சாய்ந்தமருது அஷ்ரப் வித்தியாலயத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தளபாடம்

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை வலய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் தற்போது பாடசாலைக்கு மிகவும் அவசிய தேவையாக இருந்த பாடசாலை தளபாடங்கள் தொடர்பான கோரிக்கையைச் பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீர் அவரிடம் முன்வைத்தனர்.

பாடசாலையால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயத்ததுக்கு மிகவும் அவசிய தேவையாக இருந்த ஒரு தொகுதி தளபாடங்களை பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீர் சொந்த நிதியின் மூலம் வழங்கினார்.

பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த அடைவு மட்டங்களைக் எட்டிய மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.





# கொழும்பு பாத்திமா மகளிர் கல்லூரியின் மாணவத் தலைவிகளுக்குச் சின்னம் சூட்டல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் மாணவத் தலைவிகளுக்கான பதவிப் பிரமாணமும் சின்னம் சூட்டும் நிகழ்வும் கல்லூரி அதிபர் எம்.எச்.மும்தாஸ் பேகம் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதிகளாக பேராசிரியர் பரீனா றுஸைக் மற்றும் மேல்மாகாணக் கல்வி பிரதிப் பணிப்பாளர் டபிள்யூ.எச்.ஆர். சில்வா ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக பாடசாலையின் பழைய மாணவிகளான வைத்தியர் ஷில்மியா ஷரீஃப் , சட்டத்தரணி நுஷ்ரா ஸறூக், எழுத்தாளரும் அறிவிப்பாளருமான பாத்திமா ஸிம்ரா அலி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.





# திகழி பாடசாலை மாணவனின் முன்மாதிரியான செயற்பாடு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி திகழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் திருத்தியமைக்கப்பட்ட பிரதான மண்டபத்துக்குத் தேவைப்பாடாக காணப்பட்ட 18 மின்விசிறி மற்றும் 250 கதிரைகள் சம்மந்தமாக செய்திகள் வெளிவந்தது முதல் பாடசாலையின் பழைய மாணவர்களால் மின்விசிறிகள் மற்றும் கதிரைகள் பாடசாலைக்குக் கிடைக்கின்றன என்று பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.ஏ. றஸ்ஸாக் தெரிவித்தார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவன் அஸீப் காலைக் கூட்டத்தில் வைத்து பிரதான மண்டபத்தின் தேவையான கதிரைகளில் ஒன்றை அதிபரிடம் கையளித்தார்.

மாணவர் சமூகத்துக்கு முன்மாதிரியாகச் செயற்பட்டமை வரவேற்கத்தக்க ஒரு செயற்பாடாகும் என அதிபர் தெரிவித்தார்.

இவ்வாறு ஒவ்வொரு மாணவனும் தான் கல்வி கற்கும் பாடசாலையின் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் தனது ஒத்துழைப்பை வழங்கும் போது அந்தப் பாடசாலை சிறந்ததொரு பாடசாலையாக காணப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கணக்கீட்டு முகாமைத்துவத்துக்கான விருது காரைதீவுப் பிரதேச சபைக்கு!

( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை பொது நிதி கணக்காளர் நிறுவனத்தின் சிறப்பான கணக்கீட்டு முகாமைத்துவத்துக்கான விருது காரைதீவு பிரதேச சபைக்குக் கிடைத்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய ரீதியிலான விருது வழங்கும் நிகழ்வின் போது இதற்கான விருது வழங்கப்பட்டது.

கடந்த வருடத்தில் பிரதேச சபையின் கணக்கு முகாமைத்துவத்தை சிறப்பாக அறிக்கையிட்டதற்கான சிறப்பு விருதைப் பிரதேச சபையின் செயலாளர் அ. சுந்தரகுமார் மற்றும் நிதி உதவியாளர் எம்.யூ.எம்.சபீக் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.





# வெருகல் மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்

(ஹஸ்பர்)

திருகோணமலை வெருகல் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் வேள்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையில் இலங்கைத் துறை முகத்து வாரம் கிராமசேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் நேற்று முன்தினம் வெருகல் பிரதேச செயலர் எம்.ஏ. அனஸ் தலைமையில் வழங்கப்பட்டன.

மீனவர்களின் மீன்பிடி துறையையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்கில் மீன் பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது வேள்ட் விஷன் நிறுவனத்தின் அதிகாரிகள், துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தார் ரிஷாத் எம்.பி.

(அஸ்ஹர் ஆதம்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் சம்மாந்துறை ஆதார வைத்திய சாலைக்கு அண்மையில் விஜயம் செய்தார்.

இதன் போது அங்குள்ள குறைகளை கேட்டறிந்து வைத்தியசாலையின் அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் அசாத் எம் ஹனீபா, வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு தலைவர் வைத்தியர் இஸ்ஸடீன், திட்டமிடல் பிரிவு வைத்தியர் நியாஸ், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைத் தலைவரும், முன்னாள் அரச அதிபருமான எம்.ஐ ஹனீபா, வைத்திய சாலையின் அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோருடன் கட்சியின் முக்கியஸ்தர்களான மாஹீர், தாஹீர், அஸ்மி , காதர், நியாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# பாடசாலையில் சுகாதார மேம்பாடு தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, பாடசாலை சுகாதார மேம்பாடு தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா பஸீர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய பொதுச் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.ஹில்மி பிரதம வளவாளராக கலந்துகொண்டு விரிவுரையாற்றினார்.

இந்த நிகழ்வின் போது பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சுகாதார கழக உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

பாடசாலை அதிபர்கள் மற்றும் சுகாதார கழக உறுப்பினர்களிடையே சுகாதார விழிப்புணர்வு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதே இந்தச் செயலமர்வின் நோக்கமாகும்.





# மாவடிப்பள்ளி அஷ்ரபில் ‘கசகர்ணம்’ வெளியீடு!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாவடிப் பள்ளி அல்-அஸ்ரப் மகா வித்தியாலய மாணவர்களின் ஆக்கத் திறனை வெளிப்படுத்தும் முகமாக 2023 தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுக் ‘கசகர்ணம்’ எனும் நாமம் சூடிய சஞ்சிகை பாடசாலை முதல்வர் வீ. முஹம்மட் ஸம்ஸம் தலைமையில் வெளியிடப்பட்டது.

சஞ்சிகை பொறுப்பாசிரியை சித்தி மசூறா சுஹர்தீனின் நெறிப்படுத்தலில், பாடசாலை பிரதி முதல்வர் ஏ.எல். றஜாப்தீன் ஆலோசனையின் பேரில் சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம்.என். சஞ்சிதா பர்ஹத்தைச் சஞ்சிகை ஆசிரியராகக் கொண்டு இது வெளியிடப்பட்டுள்ளது.

பெரும் முயற்சி எனும் அர்த்தம் கொண்ட ‘கசகர்ணம்’ நூல் வெளியீட்டின் இணைப்பாளரான தமிழ் பாட சிரேஷ்ட ஆசிரியர் எம்.ஐ.எம். காஸிம் சஞ்சிகை பற்றிய சிறப்பான நயவுரையை



மேற்கொண்டார்.

இந்தச் சஞ்சிகை வெளிவருவதற்கு ஆசிரியைகளான ஏ.கே.எப்.நுஷைறா, திருமதி எஸ்.சஹாப்தீன், திருமதி ஏ.எஸ்.எஸ். சமியா, திருமதி. ஏ.எல். எப்.பவாஸா ஆகியோர் தமது முழுமையான பங்களிப்புக்களை வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் பாடவிதான பிரதியதிபர் எம்.சி.எம். தஸ்தகீர், உதவியதிபர் எஸ்.எம். அஹமட் லெவ்வை, ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.




# கைவினைப் பொருள் டிப்ளோமாவுக்கு விண்ணப்பித்தோருக்கான நேர்முகம்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் நடாத்தப்படும் ஒரு வருட கைவினைப் பொருள்கள் டிப்ளோமா பாடநெறிக்காக மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நிர்வாக உத்தியோகத்தர் வே.தவேந்திரன் மற்றும் கிராம அபி விருத்தி உத்தியோகத்தர் தெ.நவநாயகம் ஆகியோரின் தலைமையில் இடம் பெற்றது.

களுவாஞ்சிகுடி பிரதேச செயலக பிரிவின் களுவாஞ்சிகுடி மற்றும் களுதாவளை ஆகிய பயிற்சி நிலையங்களுக்காக சுமார் 80 பயிலுனர்களைத் தெரிவுசெய்வதற்காக பங்குபற்றிய விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டன.

இதன் போது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயிற்சி நிலைய ஆசிரியர்கள் மற்றும் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இளம் யுவதிகளும் கலந்து கொண்டனர்.




# ஸ்ரீலங்கா கராத்தே சம்மேளனத்தின் பொதுச்சபைக் கூட்டம் தென்கிழக்கில்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

ஸ்ரீ லங்கா கராத்தே சம்மேளனத்தின் கிழக்கு மாகாணத்தினுள் உள்ளடங்கும் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்ட சம்மேளனங்களின் பொதுச்சபை கூட்டம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தின் தலைவர் முஹம்மது இக்பால் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் இடைக்கால நிர்வாக சபையால் நியமிக்கப்பட்ட புதிய நிர்வாக சபையினருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.




# திருமலை புனித யோஸப் கல்லூரியில் ஒளிவிழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை புனித யோஸப் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒளிவிழா கல்லூரி அதிபர் சீ.தியாகு பிள்ளை தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கிறிஸ்தவ, இந்து மற்றும் முஸ்லிம் மாணவர்கள் பங்கேற்றனர்.



# கூட்டுறவுத் துறையில் சிறப்பாகச் செயற்படும் குழுக்களுக்கான வருடாந்தக் கௌரவிப்பு!

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண கூட்டுறவுத் துறையில் சிறப்பாகச் செயற்படும் குழுக்களுக்கான வருடாந்த மீளாய்வும் கௌரவிப்பும் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

நிலைபேறான அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு அகம் நிறுவனம் திருகோணமலை மாவட்ட செயலகத்துடன் இணைந்து பல்வேறு துறை சார்ந்த பிரிவுகளில் பணியாற்றி வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக 2023 ஆம் ஆண்டின் வீட்டுத் தோட்டம், சேமிப்பு கடன் வழங்கல், சிரமதானம் போன்ற செயற்பாடுகளில் சிறப்பாகச் செயற்பட்ட திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் கௌரவிக்கப்பட்டன.

இந்த அமைப்பில் இணைந்து பணியாற்றிய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கௌரவிக்கப் பட்டனர்.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்.மதிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர், அகம் நிறுவனத்தின் பணிப்பாளர், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் மற்றும் கமநல சேவைஅபிவிருத்திஉத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மத்தியப் பிரதேச முதல்வராக மோகன் யாதவ் பதவியேற்றார்!



மத்தியப் பிரதேச முதல்வராக மோகன் யாதவ் இன்று பதவியேற்றார். பதவி ஏற்புவிழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.

மத்தியப் பிரதேசத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க, அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதை அடுத்து கட்சியின் முதல்வராக மோகன் யாதவ் கடந்த திங்கள் கிழமை தேர்வு செய்யப்பட்டார்.

இதையடுத்து, மத்தியப் பிரதேச தலைநகர் போபாலில் உள்ள லால் பரேட் மைதானத்தின் மோதிலால் நேரு ஸ்டேடியத்தில் இன்று பதவியேற்பு விழா நடைபெற்றது. இதில், மாநிலத்தின் புதிய முதல்வராக மோகன் யாதவ் பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு ஆளுநர் மங்குபாய் படேல் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மாநில பா.ஜ.கவின் முக்கிய தலைவர்களான ஜக்தீஷ் தேவ்டா, ராஜேந்திர சுக்லா ஆகியோர் துணைமுதல்வர்களாக பதவியேற்றனர். முன்னாள் மத்திய அமைச்சர் நரேந்திர சிங் தோமர் சபாநாயகராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இன்று நடைபெற்ற பதவியேற்பு விழாவில், பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, மத்தியப் பிரதேச முன்னாள் முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான், மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத், உத்தரகாண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, பாஜக தலைவர் ஜெ.பி. நட்டா, மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய மோகன் யாதவ்,

"நாட்டை வழிநடத்திச் செல்லும் பிரதமர் நரேந்திர மோடியின் பாதச் சுவட்டைப் பின்பற்றி மத்தியப் பிரதேசத்தை முன்னேற்றுவோம். அரசர் விக்ரமாதித்யாவின் நிலத்தைச் சேர்ந்தவன் நான். மத்தியப் பிரதேசத்தின் கோடிக்கணக்கான மக்களின் விருப்பங்களை நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளேன். விக்ரமாதித்யாவின் ஆட்சிக் காலத்தில் இருந்தது போன்ற நல்லாட்சியை நாங்கள் கொடுப்போம்" என தெரிவித்தார்.

# இந்திய லோக் சபாவிற்குள் கண்ணீர் புகை பிரயோகம்!





இந்திய நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் (லோக்சபா) ஏற்பட்ட பாதுகாப்பு மீறல் மற்றும் குழப்ப நிலை காரணமாக சபை நடவடிக்கைகள் உள்ளூர் நேரப்படி பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இரண்டு பேர் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சபாநாயகர் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

முதற்கட்ட தகவல்களின்படி இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி, இரு நபர்களும் 'சர்வாதிகாரம் ஏற்றுக் கொள்ளப்படாது" போன்ற கோஷங்களை எழுப்பியபடி கீழ் சபைக்குள் நுழைந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றம் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டபோது, அந்தச் சம்பவம் இந்திய அரசியலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

தற்செயலாக, 22 ஆண்டுகளுக்கு முன்பு இதே திகதியில் அசம்பாவிதம் இடம்பெற்றமையை இந்திய ஊடகங்கள் நினைவுபடுத்தியுள்ளன.

இந்தநிலையில், சபை நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கிய பா.ஜ.க. உறுப்பினர் ராஜேந்திர அகர்வால் கூறுகையில்,

"இருவரும் தங்கள் காலணியில் இருந்து எதனையோ எடுப்பதற்கு முன் கூட்ட அரங்கில் இருந்து உறுப்பினர்கள் வெளியேற முற்பட்டனர். அதனையடுத்து புகை கிளம்பியது.

பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். அவர்களின் நோக்கம் என்ன, அவர்கள் ஏதேனும் அமைப்புடன் தொடர்புள்ளவர்களா என்பதை நாங்கள் அறிந்துகொள்வோம்" என்று குறிப்பிட்டார்.

இதனிடையே, நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, "இரண்டு இளைஞர்கள் பார்வையாளர் பகுதியில் இருந்து குதித்தனர். அவர்களால் வாயு அடங்கிய குடுவைகள் எறியப்பட்டன. அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களால் பிடிக்கப்பட்டு பாதுகாப்புப் படையினரால் வெளியே கொண்டு வரப்பட்டனர்.

சபை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. இது நிச்சயமாக ஒரு பாதுகாப்பு மீறலாகும், ஏனென்றால் 2001ஆம் ஆண்டில் உயிர் தியாகம் செய்தவர்களின் நினைவு தினத்தை இன்று நாம் அனுசரித்தோம்" என்று அவர் தெரிவித்தார்.

# இஸ்ரேல் உலகளாவிய ஆதரவை இழக்கத் தொடங்கியுள்ளது!

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிப்பு



காசா மீது நடத்திய குண்டுத்தாக்குதல்களினால் இஸ்ரேல் உலகளாவிய ஆதரவை இழக்கத் தொடங்கியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

காசா மீது இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்திவரும் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் ஆண்டு ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை காசா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், கடந்த மாதம் தற்காலிக போர் நிறுத்தத்தின்போது 80 இஸ்ரேல் பணயக் கைதிகளுக்கு இணையாக 240 பாலஸ்தீனக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும், தெற்கு காசாவின் முக்கிய நகரத்தை இஸ்ரேல் குண்டுவீசித் தாக்கியிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் தற்போது இஸ்ரேல் படையினர் நடத்தி வரும் கொடூரத் தாக்குதலுக்கு ஹமாஸ் அமைப்பினரும் பதிலடி கொடுத்து வருகின்றனர். இஸ்ரேல் தெற்கு காசா பகுதிகளை குறிவைத்து பயங்கர தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேல், காஸா மீது தொடர் தாக்குதல்களை நடத்தி 18 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களைக் கொன்றுள்ளதாக கூறப் படுகிறது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பான நிகழ்வில் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர்,"காசா மீது இஸ்ரேல் கண்மூடித்தனமாக குண்டுவீசித் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ் படையினர் மீதான தாக்குதலில், பாலஸ்தீன மக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். இதேநிலை தொடர்ந்து நீடித்தால் இஸ்ரேல் மிக கடினமான நிலையை சந்திக்க நேரிடும். இஸ்ரேல் உலகளாவிய ஆதரவை இழந்து வருகிறது. அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகரான ஜேக்கப் சல்லிவன், இஸ்ரேல் சென்று பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளார். இஸ்ரேலுக்குத் தற்காத்துக் கொள்ள உரிமை உண்டு என நாங்கள் நம்புகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக "ஹமாஸை அழித்து பணயக் கைதிகளை மீட்கும் இஸ்ரேலின் இலக்கை அமெரிக்கா ஆதரிக்கிறது. இருப்பினும், காசா போருக்குப் பிறகு என்ன நடக்க வேண்டும் என்பது குறித்து நட்பு நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன" என்று நெதன்யாகு குறிப்பிட்டிருந்தார்.

# காசாவில் உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் வாக்கெடுப்பு

காசாவில் உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

193 உறுப்பினர்களை கொண்ட பொதுச் சபையில், இந்த யோசனைக்கு ஆதரவாக பெரும்பான்மை வாக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, 153 உறுப்பு நாடுகள் காசாவில் உடனடி போர் நிறுத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

அத்துடன், 10 நாடுகள் எதிராக வாக்களித்ததுடன் 23 நாடுகள் வாக்களிப்பில் இருந்து விலகியுள்ளன.

அமெரிக்கா, பரகுவே, ஆஸ்திரியா மற்றும் இஸ்ரேல் உள்ளிட்ட 10 நாடுகள் யோசனைக்கு எதிராக வாக்களித்துள்ளன.




அத்துடன் பிரித்தானியா, ஜேர்மன், இத்தாலி, நெதர்லாந்து மற்றும் உக்ரைன் உள்ளிட்ட 23 நாடுகள் வாக்கெடுப்பில் இருந்து விலகியிருந்ததாக தெரிவிக்கப் படுகிறது.

இந்த வாக்கெடுப்புக்கு முன்னர் கருத்துரைத்த ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதுவர் லிண்டா தோமஸ் க்ரீன் ஃபீல்ட், தற்போது ஏற்படும் எந்த போர் நிறுத்தமும் தற்காலிகமானது என குறிப்பிட்டுள்ளார்.



# நறுவிலிக்குளம் பாடசாலைக்கு தண்ணீர் மோட்டர் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மன்னார், நறுவிலிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் நீண்ட நாள் தேவையாக காணப்பட்ட தண்ணீர் மோட்டர் ஒன்று வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தானால் வழங்கப்பட்டது.

இதனை அமைச்சரின் பிரதேச மட்ட இணைப்பாளர்கள் இணைந்து பாடசாலை அதிபர் திருமதி நிவேதினியிடம் கையளித்தனர்.

இதன்போது பாடசாலையின் குறை நிறைகள் தொடர்பிலும் பிரதேசமட்ட இணைப்பாளர்கள் ஆராய்ந்ததுடன் அதனை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு கொண்டுவருவதாகவும் தெரிவித்தனர்.



# துஷ்பிரயோகங்கள தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்பூட்டல்!

(நூருல் ஹுதா உமர் , எம்.ஏ.ஏ.அக்தார்)

அண்மைக் காலமாகப் பிரதேச செயலகங்களின் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவுக்குச் சிறுவர் துஷ்பிரயோகங்கள், வீட்டு வன்முறை, குடும்பப் பிரச்சினைகள் மற்றும் பால் நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பாக அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூக மட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் விழிப்புணர்வுகளை அதிகரிக்க வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது.

அந்தவகையில், “வன்முறையற்ற சமூகம் மகிழ்ச்சியான உலகு” எனும் கருப்பொருளில் வீதி நாடகம் மாணவ மற்றும் சமூக பங்கேற்புடன், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் கிராமங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

இவ்வீதி நாடகமானது, இறக்காமம் அஷ்ரப் தேசிய பாடசாலை, இறக்காமம் அல் அமீன் மகா வித்தியாலயம், இறக்காமம் அஸ்-ஸபா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெற்றது.

இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவும், இஸ்லாமிக் ரிலீப் நிறுவனமும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தி வருகின்றன.






# வடக்கு விவசாய அமைச்சால் சர்வதேச மண் தினம் அனுஷ்டிப்பு

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவு முன்னெடுத்த சர்வதேச மண் தினம் - 2023 நிகழ்வு சர்வதேச மண் தின நிகழ்வுதிருநெல்வேலியிலுள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெற்ற மண்தின நிகழ்வின்போது விவசாய அமைச்சால் அறுவடை சஞ்சிகை வெளியிடப்பட்டது. சர்வதேச மண்தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

சிறப்பு நிகழ்வாக விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து வழங்கிய “மண் தேவி” விழிப்புணர்வு நாடகம் மேடையேற்றப்பட்டது.

மண்தின நிகழ்வில் விருந்தினர்களாக, வடக்கு மாகாண பிரதம செயலர் சமன்பந்துலசேன, யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தன், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பேராசிரியர் சீ.வசந்தரூபா, உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், யாழ். பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் கலாநிதி இ.அன்ரனிராஜன் உள்ளிட்டோரும், விவசாய அமைச்சு மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.



குறித்த மண்தின நிகழ்வுகளை வடக்கு மாகாண விவசாய அமைச்சுடன் இணைந்து வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் பிரதேச சபைகள் இணைந்து ஒழுங்கமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘சூல்சோறு’ சிறுகதைத்தொகுதி வெளியீடு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு எம்.ஏ.ரஹீமாவின் ‘சூல்சோறு’ வெளியீட்டு நிகழ்வு கொழும்பு அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தமிழ் மாமணி அல் அசூமத் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் எம்.எச் மும்தாஜ் பேகம், சிறப்பு அதிதியாக ஷம்ஸ் ஷப்பூக் ஆகியொரும் கௌரவ அதிதியாகளாக திக்வல்லை கமால் , மர்ஹூம் எம்.எச். எம் ஷம்ஸின் புதல்வரும், தினகரன் பிராந்திய செய்தி ஆசிரியருமான பாஹிம் ஷம்ஸ், எம் .ஜே.எம் மலீஹா ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

முதல்பிரதியை ஊடகவியலாளர் பாஹிம் ஷம்ஸ் பெற்றுக்கொண்டார்.



நூல் திறன் நோக்கைப் பன்முக ஆளுமை அஷ்ரஃப் ஷிஹாப்தீனும், நூலாசிரியர் அறிமுகத்தைச் சிரேஷ்ட அறிவிப்பாளர் புர்கான் பீ இஃப்திகாரும், கவி வாழ்தை திருகோணமலை அஷ்ரஃபா நூர் தீனும், கவிஞர் எம்.வஸீரும் வழங்கினர்.





# ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பெருவிழா!

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமும், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஒட்டுசுட்டான் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பெருவிழா இன்று(13) மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் நகர் பகுதியில் இருந்து இன்று காலை தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரங்களை பிரதிபலித்து ஆரம்பமான பண்பாட்டு ஊர்தி பவனி ஆனது மாங்குளம் முல்லைதீவு பிரதான வீதியூடாக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தை சென்றடைந்தது. அங்கு பிரமாண்டமாக அமைக்கப்பட்ட அமரர் தில்லையம்பலம் அரங்கில் பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி பரமோதயன் ஜெயராணி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தனராக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவரும் முன்னைநாள் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான நாகலிங்கன் வேதநாயகம், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அருளம்பலம் உமா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கௌரவ விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் சிவபாலன் குணபாலன், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் உதவிச் செயலாளர் சுரேந்திரன் ஆகியொரும் சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபை தலைவர் சிவசுந்தரம் கணேசபிள்ளையும் கலந்து கொண்டனர்.

அரங்கத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் உடைய பல்வேறு கலைஞர்களின் பல்வேறு வகையான நிகழ்வுகளும் சிறப்பாக பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம் உள்ளிட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றன. இறுதியாக முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தெரிவு செய் யப்பட்ட துறை சார்ந்த கலைஞர்க ளுக்கான பண்டாரவன்னியன் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.











